# சிறுபஞ்சமூலம் காட்டும் கொல்லாமை எனும் அறநெறி

# The Morality of Non-Killing Shown by Sirupanchamoolam

**மு. முவின்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆர் வி எஸ் கலை அறிவியல் கல்லூரி
கோவை, தமிழ்நாடு, இந்தியா

**M. Muvin**
*Assistant Professor, Department of Tamil*
*RVS College of Arts and Science*
*Coimbatore, Tamil Nadu, India*

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதன் நாகரீகமற்று வாழ்ந்திருந்த காலத்தில், அவனது வாழ்க்கை உணவை நோக்கியதாக மட்டுமே இருந்தது. உணவு, உடை, இருப்பிடம் என்ற அடிப்படை அறிவைப் பெற்று நாகரீகமடைந்த நிலையில், பிற உயிர்களிடமிருந்து வேறுபட்டு, அன்பு, அறம் என்ற உயர்ந்த வாழ்வை வாழத் தொடங்கினான். அன்பும், அறமும் பிறழ்ந்து போகும் வேளையில் அவ்வப்போது சான்றோர்கள் தோன்றி, நற்கருத்துக்களை மக்களுக்கு வழங்கி நல்வழிப்படுத்தினர். உலக மக்களின் முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துக் கொடுப்பதில் அற இலக்கியங்களின் பங்கு அதிகமாக உள்ளது. பல நன்னெறிகள், உலகின் உன்னதமான வாழ்க்கைக்கு மனிதனை இட்டுச் செல்லும் நிலையில், தமிழிலும் பல அற இலக்கியங்கள் மனித வாழ்வின் உயர்ந்த அறங்களைப் போதிக்கின்றன. அனைத்து அறங்களுக்கும் அடிப்படையான ஓர் அறமான, பிற உயிர்களைக் காத்தல் மற்றும் மதித்தல் எனும் தகுதியை உடைய கொல்லாமை எனும் அறம் உயர்வுமிக்கதாக கருதப்படுகிறது. மனிதன், விலங்குகள், பூச்சிகள், பறவைகள் ஆகியவற்றைக் கொல்லாதிருத்தல் கொல்லாமையாகும். எக்காரணம் கொண்டும் எவ்வுயிரையும் கொல்லாது அனைத்து உயிர்களுக்குமான உரிமையான உயிர்வாழும் உரிமையை உறுதி செய்தல் மனிதன் எனும் பண்பட்ட இனத்தின் ஆகப்பெரும் பண்பாட்டு உச்சமாகும். மனிதனின் பண்பட்ட மனத்திற்குத் தக்க சான்றாகத் திகழ்வது கொல்லாமைச்*

## Abstract

*When man lived uncivilized, his life was only directed towards food. Having acquired the basic knowledge of food, clothing and shelter, he became civilized, different from other living beings and began to live a higher life with love and virtue. While love and virtue are degenerating, Noble persons appeared and gave good news about love and virtue to the people. The role of moral literature is great in paving the way for the progress of the people of the world. While many virtues lead man to the noble life of the world, many moral literatures in Tamil also teach the highest virtues of human life. A virtue that is fundamental to all virtues, the virtue of non-killing, which has the merit of protecting and respecting other living beings, is considered noble. Non-killing is non-killing of humans, animals, insects and birds. Assuring the right to life, the right of all living beings, without killing any living being for any reason, is the supreme cultural achievement of the civilized race of man. The Non-Killing thinking is a testament to the cultured mind of man. Murders are taking place in the world today. Apart from this, the higher moral of non-killing becomes necessary for the individual to live happily and to allow other beings to live. On*

*சிந்தனையாகும். இன்று உலகில் கொலைகள் அதிக அளவில் நிகழ்கின்றன. இதைத் தவிர்த்து, தனிமனிதன் மகிழ்ச்சியுடன் வாழவும், பிற உயிர்களை வாழவிடுவதற்கும், கொல்லாமை எனும் உயர்நெறி அவசியமாகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் கொல்லாமை எனும் சிந்தனையுடன் இருத்தல் என்பது இன்று காலத்தின் தேவை என்பதன் முக்கிய அடிப்படையில், இத்தகைய கொல்லாமை தமிழ்ச் சமுகத்தில் தோன்றிய பிறகு, காலத்தை வரையறுக்கும் அளவிற்கு நிலைபெற்ற சங்கம் மருவிய கால இலக்கியங்களில் ஒன்றான சிறுபஞ்சமூலம் என்ற நூல் பல்வேறுபட்ட அறங்களை வலியுறுத்தும் போதிலும், கொல்லாமை எனும் உயர்ந்த அறம் அந்நூலில் பெற்றுள்ள முக்கியத்துவத்தையும், சிறுபஞ்சமூலத்தில், அவ்வறம் வலியுறுத்தப்பட்டிருக்கும் கருத்தாக்கத்தையும் தெள்ளிதின் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *நன்நெறி, கொல்லாமை, மனிதன், கொலை, உயர் வாழ்வு*

*the main basis that every individual should have the thought of Non killing is the need of today, after such Non killing appeared in Tamil society, after the Sanga literatures, which had established themselves to define the time, would emphasize various virtues However, the purpose of this study is to investigate the importance of the highest virtue called Non killing and the concept emphasized in the Tamil moral literature.*

***Keywords**: Moral, Non-Killing, Man, Murder, Noble Life.*

**Citation**

Muvin, M. "The Morality of Non-Killing Shown by Sirupanchamoolam." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 15–22.

**முன்னுரை**

*மனிதன், விலங்குகள், பூச்சிகள், பறவைகள் என எவ்வுயிரையும் கொல்லாதிருத்தல் கொல்லாமை அறம் எனப்படும். எக்காரணம் கொண்டும், எந்த உயிரையும் கொல்லாது, அனைத்து உயிர்களின் அடிப்படை உரிமையான, உயிர் வாழும் உரிமையை உறுதி செய்தல் என்பது மனிதன் எனும் பண்பட்ட இனத்தின், ஆகப்பெரும் பண்பாட்டு உச்சமாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று சிறுபஞ்சமூலம். இந்நூலில் பொய்யாமை, கொல்லாமை, கல்வி கற்றலினன் பயன், தவத்தின் பயன், கொடையின் சிறப்பு, தலைவனின் தன்மை, பெண்டிர் சிறப்பு குறித்த பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. சிறுபஞ்சமூலம் காட்டும், பல அறங்களில் ஒன்றான கொல்லாமை பற்றிய செய்திகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**சிறுபஞ்சமூலம் - ஒரு பார்வை**

*சிறுபஞ்சமூலம் எனும் நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் காரியாசான். இந்நூலின் காலம் கிபி 6ம் நூற்றாண்டு (பழனியாண்டி சு, ப 6)*

***முழுதுணர்ந்து மூன்றொழுத்து மூவாதான் பாதம்***
***என்று கடவுள் வாழ்த்தில் காணப்படும் தொடர் தீர்த்தங்கரர்***
***வழிபாட்டைக் குறிக்கிறது (மாதவன் சு, பா - 1, ப 212)***

*எனும் சு.மாதவன் என்பவரது மேற்கோளில் இருந்தும், சமணர்களுக்கே உரிய வேள்வி மறுப்பு போன்ற அறங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளதாலும் சிறுபஞ்சமூலம் ஒரு சமண நூலாகத் திகழ்கிறது எனலாம்.*

**சான்றோரது பண்புகளில் ஒன்று**

*பண்புடைமை, அறிவுடைமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, தவம் போன்றவை சான்றோர்களது பண்புகளாக இருப்பது போல, அன்பை அடிப்படையாக் கொண்ட கொல்லாமை அறமும், சான்றோரது பண்பு என்று சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகின்ற பாடல்கள் பின்வருமாறு,*

***..நன்குணர்ந்தார்***
***என்பெறினும் கொல்லார் இயைந்து (மாணிக்கவாசகன் ஞா, பா 47, ப 58)***
***..கொல்லானேல் பல்லவர்***
***ஓத்தினால் என்ன குறை (மாணிக்கவாசகன் ஞா, பா 82, ப 92)***

*மேற்குறிப்பிட்ட பாடல்கள், சான்றோர் பொன், பொருள் பெற்றாலும், கொலையைச் செய்யமாட்டார்கள் என்றும், உயிர்க் கொலை செய்யாது வாழ்பவன் கொல்லாமை என்னும் பண்பால் சான்றோனாகத் திகழும் போது, நூலறிந்த பெரியோர் ஆக்கி வைத்துள்ள நூல்களால் அறிந்து கொள்ள வேண்டியது என்ன உள்ளது ? என்றும் வினவுகிறது. இவ்வாறு கொல்லாமை என்ற சிந்தனையுடையவன் மேலும் பண்புகளாக அறிந்து கொள்ள வேண்டியவை எவையுமில்லை என்பது குறிப்பாக அமைகிறது.*

**பாற்பட்டார்**

***ஏற்றவாறு இன்புற்று வாழ்வன ஈடழியக்***
***கூற்றுவப்பச் செய்யார் கொணர்ந்து (மாணிக்கவாசகன் ஞா, பா 83, ப 93)***

*எனும் பாடல், நன்னெறியின் வழிச் செல்லும் சான்றோர், பழி, பாவத்தை ஏற்க விரும்பாமல்,*

*கூட்டத்தோடு இன்பமாக வாழ்கின்ற விலங்கு, பறவை போன்ற உயிர்களை அவற்றின் பெருமை குன்றக் கொன்று, எமனுக்கு விருந்தாக்க மாட்டார்கள் என்று கூறுகிறது.*

**மறுபிறவி இல்லை**

***ஓர்த்துடம்பு பேருமென்று ஊன்அவாய் உண்ணானேல்***
***பேர்த்துடம்பு கோடல் அரிது (மாணிக்கவாசகன் ஞா, பா 18, ப 31)***

*எனும் சிறுபஞ்சமூலப் பாடல், உடம்பு இளைக்கும் என வருந்தி ஊனை உண்ணத் தொடங்காமல் இருப்பவன், மீண்டும் உடலெடுத்தல் (மறு பிறவி) அரிது என்று கூறுகிறது.*

***ஊன்மறுத்துக் கொள்வானேல் உடம்பு எஞ்ஞான்றும்***
***தான்மறுத்துக் கொள்ளான் தளர்ந்து ( மாணிக்கவாசகன் ஞா, பா 20, ப 33 )***

*எனும் சிறுபஞ்ச மூலப்பாடல் ஊன் உண்ணாதவன் பிறவித்துயரை அடைய மாட்டான் என்று கூறுகிறது.*

***உடம்பின் ஆர்வேலி ஒருப்படுத்து ஊன்ஆரத்***
***தொடங்கானேல் சேறல் துணிவு (மாணிக்கவாசகன் ஞா, பா 33, ப 44)***

*எனும் சிறுபஞ்சமூலப்பாடல், உயிரெனும் வேலி அமைத்துப் பாதுகாத்த உடம்பை, அவ்வுயிராகிய வேலியை நீக்கி உயிரைக் கொல்லாமலும், கொன்ற உயிரின் சதையைத் தின்னாமலும் இருப்பவன் உயர்கதி அடைதல் உறுதி என்று கூறுகிறது.*

**பாவம் ஐவருக்குரியது**

***கொன்றவன்,***
***கொலைக்கு உடன்பட்டவன்,***
***கொன்ற உயிர்களைப் பெற்றுக் கொண்டவன்,***
***கொன்ற உயிர்களைச் சமைத்தவன்,***
***சமைத்த ஊன் உணவை உண்பவர்***

*என ஐவருக்கும் நீதி நூல்கள் வகுத்த எல்லைகளை அழித்த பாவம் சேரும் என்று சிறுபஞ்சமூலப் பாடல் - 69 (மாணிக்கவாசகன் ஞா, ப 80) கூறுகிறது.*

**சிறுபஞ்சமூலத்தில் கொல்லாமை வகைகள்**

*சிறுபஞ்சமூலப் பாடல்கள் தரும் கொல்லாமைக் கருத்துகளைக் கொண்டு, அவற்றைப் பின்வரும் இருவகைகளாகப் பகுக்கலாம்.*

1. *உயிரினங்களைக் கொல்லாமை*
2. *மனிதர்களைக் கொல்லாமை*

**உயிரினங்களைக் கொல்லாமை**

*வேள்வியின் பொருட்டோ, உணவு உண்ணுதல் பொருட்டோ, கடவுளுக்குப் பலி இடுதல் பொருட்டோ ஆடு, மாடு போன்ற விலங்குகளையோ, சேவல், கோழி போன்ற பறவைகளையோ கொல்லாமல் இருப்பது உயிரினங்களைக் கொல்லாமை எனப்படும். இவ்வாறு பிற உயிரினங்களைத் துடிதுடிக்க வைத்துக் கொலை செய்வது கருணையற்ற நிலையாகும். இதனை, உணவு போன்ற தேவைகளுக்கு உயிர்களைக் கொல்வது வேறு, உயிரினங்களைச் சித்தரவதை செய்து கொல்லது என்பது வேறு. இதனை உயிரினங்களைக் கொன்று உண்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில், வலி என்பது மூளை*

*வழியாகத்தான் உடலுக்குப் பரவுகிறது. பலி இடும் உயிரினத்தைக் கொண்டு சென்று அவற்றைத் துடிதுடிக்க வைக்காமல், உயிர் போக்க வழி முறை இல்லையா? இருந்நால், அவற்றைப் பயன்படுத்தட்டும். (அறச்செல்வி, ப 57) எனும் கருத்தினைப் பதிவு செய்து, உயிர்களைக் கொடுமை செய்து கொல்பவர்களைக் கண்டு வினா எழுப்புகிறார் அறச்செல்வி. இவர்தம் கருத்தின் அறச்சீற்றமாய், சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான் கொல்லாமைச் சிந்தனையில், கொன்று உண்பவன் நாக்கு செத்துவிடும் என்று கூறும் பாடல் பின்வருமாறு, கொன்று உண்பான் நாசாம் (மாணிக்கவாசகன் ஞா, பா 9, ப 22)*

***கோறலும் நஞ்சு ஊனைத் துய்த்தல்***
***தீது உரையும் நஞ்சு (மாணிக்கவாசகன் ஞா, பா 12, ப 25)***

*மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடல்களில், உணவுக்காகக் கொலை செய்து, உயிரினங்களைக் கொன்று உண்பது வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளதும், கொன்று உண்பான் நாச்சாம் என்று சபித்தல் பொருண்மையில் ஊன் உண்ணாமை வலியுறுத்தப்பட்டுள்ளதும் நோக்கத்தக்கதாகும்.*

**மனிதர்களைக் கொல்லாமை**

*போர்போன்ற நிகழ்வுகளின் போதோ, சாதி, மத மோதலின் போதோ, தனிமனிதர்களுக்குள் இருக்கும் தனிப்பட்ட பகை காரணமாகவோ என எந்தவொரு சூழலிலும் ஒரு மனிதனை மற்றொரு மனிதன் கொல்லாமல் இருப்பது மனிதர்களைக் கொல்லாமை எனப்படுகிறது.*

*ஆசாரக்கோவை தவிர பிற அற நூல்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் கொல்லாமை அறத்தை வெளிப்படுத்துகின்றன. எந்த ஒரு அறநூலும் மனிதனைக் கொல்லாதே என்று தனிப்பட்டுக் கூறாமல் பொதுவாகவே உயிர்களைக் கொல்லுதல் தவறு என்றும், உயிர்களைக் கொல்லாமல் இருப்பது நன்று என்று மேலோட்டமாகக் கூறியுள்ளன.*

*அறநூல்கள் வலியுறுத்துகின்ற கொல்லாமை எனும் உயர்நோக்கம் கொலையிலிருந்து விலங்குகளை, பறவைகளை அதாவது, பிற உயிர்களை மீட்பதாகவே அமைந்துள்ளது. ஆனால் உயிர்க்கொலை கூடாது எனும் பொருண்மையில், அறநூல்கள் வலியுறுத்துகின்ற கொல்லாமையை நோக்கினால், மனிதனும் உயிர்களுக்குள் அடங்குவான் என்பதைக் கருத்தில் கொண்டு, தனிமனிதக் கொலைகளை தனிப்பட்டு வலியுறுத்தாமல் இருந்திருக்கலாம். போரில் ஒருவனை ஒருவன் வெட்டிச் சாய்ப்பது பெரும் அறமாக்கப்பட்டிருந்ததனால், பெரும்பாலான புலவர்களுக்கு, போரைக் கொல்லாமைச் சிந்தனையில் சேர்ப்பதற்கு மனம் இல்லாமல் போயிருக்கலாம். இதன் வெளிப்பாடாக,*

***ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்***
***புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை (பாலசுப்ரமணியன் கு வெ, பா 76, ப 196)***

*என்று இடைக்குன்றூர்க்கிழார் எனும் புலவர், பாண்டியன் தலையாளங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியுள்ளார். இவ்வரிகளில் மிக இயல்பாக போரை, புலவர் கடந்து விடுவதை உணர முடிகிறது.*

*இவ்வாறு மனிதனைக் கொல்லுவதை இன்று பண்பட்ட சிந்தனை கொண்ட சில அமைப்புகளும், அறிஞர்களும் எதிர்த்து வருகின்றனர். பொதுவாக உயிர்க்கொலை கூடாதென்று வலியுறுத்தும் அறஇலக்கியங்களுக்கு மத்தியில் சிறுபஞ்சமுலத்தில் மட்டும் மனிதனைக் கொல்வதை எதிர்த்து ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அப்பாடல் பின்வருமாறு,*

***சூலாமை சூலில் படுந்துன்பம் ஈன்றபின்***
***ஏலாமை ஏற்றால் வளர்ப்பு அருமை - சால்பவை***

***வல்லமை வாய்ப்ப அறிபவர் உண்ணாமை***
***கொல்லாமை நன்றால் கொழித்து (மாணிக்கவாசகன் ஞா, பா 25, ப 84)***

*இப்பாடலில் குழந்தைப் பேறின்மையால் துன்பம், குழந்தை பெறும்காலத்தில் துன்பம், பெற்ற குழந்தையை ஏற்காமை, ஏற்று வளர்க்கும் காலத்தில் வரும் துன்பம், அவ்வாறு வளர்த்த குழந்தையிடம் நல்ல குணமின்மை கண்டுவரும் துன்பம் என ஐவகைத் துன்பங்களும் பிறப்பால் வருவதை உணர்ந்தவர்கள் கொல்லாமையுடனும், புலால் உண்ணாமையுடனும் வாழ்தல் நன்று என்ற பொருள் அமைந்துள்ளது. பிறப்பினால் மனிதர்களுக்குத் துன்பம் வரும் என்றநிலையில் அத்தகைய பிறவித் துன்பத்தை கொலை, பலி போன்றவற்றைச் செய்து மேலும் அதிகரிக்க வேண்டாம் என்று மறைமுகமாக இப்பாடலில் ஆசிரியர் காரியாசான் கூறியுள்ளார். இதிலிருந்து, மற்ற தமிழ் அறநூல்களை இயற்றிய ஆசிரியர்களிடம் இல்லாத அளவிற்குத் தனிப்பட்டு மனிதனைக் கொல்லாதே என்று வலியுறுத்தும் உயிர்நேயச்சிந்தனை சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான் அவர்களிடம் இருந்ததை உணர முடிகிறது.*

**குழவி பலி கொடுப்பான்**

*கொல்லாமைக்கு நேர்மாறாக காரியாசானது உயிர்நேயத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் சிறுபஞ்சமூலத்தில் ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது வியப்பாக உள்ளது. அப்பாடல் பின்வருமாறு,*

***பஞ்சப் பொழுதகத்தே பாத்துண்பான் காவாதான்***
***அஞ்சாது உடைபடையுள் போந்தெறிவான் - எஞ்சாதே***
***உண்பது முன்ஈவான் குழவி பலி கொடுப்பான்***
***எண்பதின் மேலும் வாழ்வான் (மாணிக்கவாசகன் ஞா, பா 78, ப 88)***

*எனும் பாடலில் உள்ள குழவி பலி கொடுப்பான் என்ற சொல்லாடல் வெளிப்படையாகத் தரும் பொருள், குழந்தையைப் பலி கொடுப்பவன் எண்பது வயதுக்கு மேல் வாழ்வான் என்பதே ஆகும். ஆனால், இதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கம் வேறுபட்டதாக உள்ளது. பலி என்பதற்கு உணவு என்று பொருள் வழங்குகின்றனர். உரையாசிரியர்கள் ஞா. மாணிக்கவாசகர் மற்றும் துரை இராசாராம் ஆகியோர், குழவி பலி கொடுப்பான் என்பதனை, பசித்த குழந்தைக்குச் சோறு தருபவன் என்று குறிப்படுகின்றனர். எவ்வாறாயினும் பலிகொடுப்பான் என்பது முரணாக அமைந்துள்ளது. காரணம், குழந்தைக்கு உணவு கொடுப்பான் என்று, காரியாசான் பொருள் கூற வந்திருப்பாரேயானால், மிகத் தெளிவாக உணவு என்றே பயன்படுத்தியிருக்கலாம். சொல்லாட்சித் திறனிலும் காரியாசான் மிகவும் கவனமுடையவராக இருப்பதை, அவரது சிறுபஞ்சமூலத்தில் இருந்தே தெள்ளிதின் உணர முடிகிறது.*

*இது எவ்வாறெனில், ஏலாதி நூலின் ஆசிரியர் கணிமேதாவியார், கொல்லாமையை பல பாடல்களில் வலியுறுத்துகிறார். ஆனால், கொல்லாமை எனும் சொல்லாடலை பாடல்களில் ஒரு இடத்தில் கூட பயன்படுத்தவில்லை. ஆனால், சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் கொல்லாமைச் சிந்தனையையும் வலியுறுத்தி கொல்லாமை என்ற சொல்லையும் பாடல்களில் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.*

*கொல்லாமை எனும் சொல்லாடலை ஏலாதியின் ஆசிரியர் கணிமேதாவியார் அறிந்திருக்கவில்லை என்று கூற இயலாது. ஏனெனில், காரியாசானும், கணிமேதாவியரும் ஒரு சாலை மாணவர்கள் ஆவர். இந்நிலையில், மேம்போக்காக கொல்லாமைச்சிந்தனையை மட்டும் வலியுறுத்துவதோடு இல்லாமல் ஆழ்ந்த சிந்தனையோடு பாடல்களில் கொல்லாமை என்ற சொல்லையும் பயன்படுத்தியதில் இருந்து, காரியாசான் சொல்லாட்சியில் கவனமுடையவர் என்பதனை*

*உறுதியாக நோக்க முடிகிறது. இவ்வாறு, சொல்லாட்சியில் கவனமுடையவர் காரியாசான் எனும் நோக்கில், குழவி பலி கொடுப்பான் எனும் சொல்லாடல், காரியாசான் அவர்களால் பயன்படுத்தப்பட்டிருப்பது சாத்தியமில்லை என்பதைத் தெளிவாக உணர முடிகிறது. ஏனெனில், திருவள்ளுவர் தவிர்த்து, மற்ற தமிழ் அறஇலக்கிய ஆசிரியர்களைக் காட்டிலும், அதிக எண்ணிக்கையிலான பாடல்களில் கொல்லாமையை வலியுறுத்தி, கொலைச் செயலைக் கண்டித்தவர் காரியாசானே ஆவார். சுவடிகளில் எழுத்துக்களின் தெளிவின்மை காரணமாக குழவிக்குப் பால் கொடுப்பான் என்பது, சுவடிகளைப் பதிப்பித்த வேளையில் குழவி பலி கொடுப்பான் என்று மாறியிருக்கலாம். மேலும், உரையாசிரியர் ஞா.மாணிக்கவாசகன் அவர்கள், குழவி பலி கொடுப்பான் என்பதற்கு,*

***பசித்த பச்சிளங் குழந்தைக்குச் சோறு கொடுத்தவன்***

***(மாணிக்கவாசகன் ஞா, ப 89 )***

*என்று பொருளுரைக்கிறார். அவ்வாறு பசித்த பிள்ளைக்குப் பால் கொடுத்தல் தானே, சமூகத்திற்கு பழகிய பழக்கமுமாக, பழக்கப்பட்ட சொல்லாடலுமாக இருக்கிறது. பசித்த பச்சிளம் பிள்ளைக்குப் பால் கொடு என்பதை விடவும், பசித்த பச்சிளம் பிள்ளைக்குச் சோறு கொடு என்பது பழக்கத்திற்கு நெருக்கமில்லாமல் உள்ளது. எனவே, பலி எனும் சொல் இருக்குமிடத்தில் பால் என்ற சொல் இடம்பெற்றிருக்கவே வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. பழமையான இலக்கியங்களில் இடைச் செருகல்கள் மிகச்சாதாரணமாக நடைபெற்றுள்ளது என்பதை ஆய்வாளர்களும், அறிஞர்களும் கண்டறிந்துள்ளனர். மேலும், சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற மதங்களுக்கிடையே இருந்த காழ்ப்புணர்ச்சியை அந்தந்த மதத்தின் கொள்கைகளை வெளிப்படுத்தும் இலக்கியங்களின் வழி தெளிவாக அறிந்து கொள்ள முடிவதிலிருந்து, சிறுபஞ்சமூலம் சமணம் சார்ந்த கொள்கைகளை வலியுறுத்துவதால் காலப்போக்கில், சமண சமயத்திற்கு எதிரானவர்களின் முயற்சிகளினால் கூட பலி கொடுப்பான் எனும் சொல்லாடல் இடைச் செருகப்பட்டிருக்கலாம் என்பதும் உணரத்தக்கதாகும்.*

**முடிவுரை**

*கொலை கொடிது என்றும், கொல்லாமை சான்றோரது பண்பு என்றும், கொல்லாமைச் சிந்தனையுடையவன் பிறவித்துயரை மீண்டும் அடைய மாட்டான் என்றும் வலியுத்தவதை அறிய முடிகிறது.*

*சிறுபஞ்சமூலம் மற்ற தமிழ் அறநூல்களுடன் ஒன்றுபட்டு உயிரினங்களைக் கொல்லக் கூடாது என்றும், அதேசமயம் மற்ற அறநூல்களில் இருந்து வேறுபட்டு ஒற்றைப்பாடலில் மனிதர்களைக் கொல்லக் கூடாது என்று குறிப்பிட்டும் கூறுவது உணரத்தக்கதாகும்.*

*குழவி பலி கொடுப்பான் என்பதில் அமைந்துள்ள பலி எனும் சொல்லாடல் பதிப்பின் போது சுவடிகளில் இருந்த எழுத்து மயக்கத்தின் காரணத்தால், திரிந்தோ அல்லது மதத்தினால் ஏற்படும் காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ இடைச்செருகப்பட்ட சொல்லாகவோ இருக்கலாம் என்பதை உணர முடிகிறது.*

**துணைநூற்பட்டியல்**


1. *அறச்செல்வி, சங்க இலக்கியத் தொன்மங்களில் செல்வி, பாரதி செல்லம்மா பதிப்பகம், 2019, கோவை, இந்தியா.*
2. *பழனியாண்டி சு, சிறுபஞ்சமூலம் ஒரு பார்வை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2009, சென்னை, இந்தியா*

3. *பாலசுப்ரமணியன் கு வெ முதலியோர் (உ.ஆ) புறநானூறு தொகுதி - 1, நியூசெஞ்சரி புக்ஹவுஸ் , 2014, சென்னை, இந்தியா*
4. *மாணிக்கவாசககன் ஞா (உ.ஆ), சிறுபஞ்சமூலம் மூலமும் விளக்க உரையும், உமா பதிப்பகம், 2016, சென்னை, இந்தியா*
5. *மாதவன் சு, தமிழ் அறஇலக்கியங்களும் பௌத்த சமண அறங்களும், நியூசெஞ்சரி புக்ஹவுஸ், 2017, சென்னை, இந்தியா.*

**References**

1. Araselvi, Sanga Ilakkiya Thonmangalil Selvi, Bharathi Chellama Publication, 2019, Coimbatore, India
2. Palaniyandi Su, Sirupanchamoolam Oru Paarvai, Ulagaha Tamil Aracichi Nirivanam, 2009, Chennai, India
3. Balasubramanian Ku Ve, Purananooru Volume 1, New Century Book House, 2014, Chennai, India
4. Maanikavasagan G, Sirupanchamoolam (Moolamum Vilakammum), Uma Publications, 2016, Chennai, India
5. Madhavan Su, Tamil Arailakiyyangalum Boutha Samana Arangalum, New Century Book House, 2017, Chennai, India